(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 281]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2013 யூன் 07, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2411/ '12

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012.02.11ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் காரணமாக அசௌகரியத் திற்குள்ளான வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இம் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவியொன்று வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அது வழங்கப்படும் முறையியல் யாது என்பதையும்;

(iv) இந் நிவாரண உதவி வழங்கப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவி வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) நாட்டுக்கு சுமையாகாமல் சுயதொழில் ஈடுபட்டு சமூகத்துக்கும் சேவை வழங்கி வரும் இப்பிரிவினருக்கு நிவாரணம் வழங்காமை பெரும் அநீதி அல்லவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2457/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச சபை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின், நிர்மாணப் பணிகளை நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமாயின் எத்திகதியில் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2563/ '12

3\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகளிர் தொடர்பான தேசிய குழுவினால் பெண்களின் முன்னேற்றம் கருதி நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட மேற்படி பணத் தொகையைச் செலவிட்டு நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்குப் போதியளவு சேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2825/ '12

4\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச துறையில் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங் களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) நாட்டில் தற்போதுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையையும்;

(iv) அரச துறையிலுள்ள பட்டதாரியொருவருக்கு வழங்கும் சராசரி சம்பளத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3049/ '12

5\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒட்டுமொத்த விவசாய இரசாயனப் பொருட்கள் சந்தையில் 99% தேவையை பூர்த்தி செய்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விவசாய இரசாயன பொருட்கள் பிரிவு, அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டமை, தேவையான வளங்கள் வழங்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக தற்போது செயலிழக்கும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விவசாய இரசாயனப் பொருட்கள் பிரிவில் நிலவும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரிவிற்கு அரசியல் நியமனங்கள் வழங்குவதன் மூலம் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு பதிலாக நியாயமான முறையில் விண்ணப்பங்களை கோரி சம்பந்தப்பட்ட நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3283/ '12

6.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1967.01.05 ஆம் திகதிக்கு முன்னர் ஒலிபரப்புத் திணைக்களத்தில் (கூட்டுத்தாபனமாக தாபிக்கப்படுவதற்கு முன்னர்) அமைய அடிப்படையில் சேவையாற்றிய கே.ஏ கருணாசேன, எம்.டீ.சீ.பீ பெரேரா, எல்.பீ கருணாரத்ன, ஈ.எம். விமலசேன ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமை தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட HRC/5518/06/L – 13 ஆம் இலக்க 2007/8/20 ஆம் திகதிய சிபாரிசுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட சிபாரிசுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) 17/2005 ஆம் இலக்க, 2005/10/ 05 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3285/ '12

7.

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் நிறுவனமொன்றின் செலவில் மேற்கொள்ளப்பட்ட மதவாச்சிய அத்தாகட அட்டம்பகஸ்கட வீதிக்கு காப்பட் இட்டு செப்பனிடும் பணிக்காக பிறிதொரு ஒப்பந்தக்காரரினால் ரூபா நூற்று அறுபது இலட்சம் பணத் தொகை மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மாகாணத்திலுள்ள வீதிகள் தொடர்பாக நன்கு விடயங்களை அறிந்திருந்த வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னாள் உயர் அதிகாரியொருவர் மேற்படி கொடுப்பனவை மோசடியான விதத்தில் சிபாரிசு செய்துள்ளாரென்பதையும்;

(iii) அனுராதபுரம் ஒயாமடுவயில் நடைபெற்ற 'தயட்ட கிருல' கண்காட்சிக்கு இணைவாக அனுராதபுரம் ஒயாமடுவ வீதியின் 3 கிலோமீட்டர் தூரத்தை செப்பனிடும் பணிக்கும் சுமார் ரூபா. 9 கோடி செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்

(iv) வடமத்திய மாகாண வீதிகளை செப்பனிடுவதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படுகையில் கேள்விப்பத்திர நடைமுறை முழுமையாக மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கூறியவாறு எத்தனை வீதிகளை நிதி மோசடியுடன் செப்பனிட்டுள்ளதென்பதை ஆராய்வாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3299/ '12

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் போது கவனத்திற்கொள்ளப்படும் குறைந்தபட்ச வயதெல்லை யாதென்பதையும்;

(ii) அரசாங்கத்தின் தாமதத்தினால், பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதில் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மேற்படி வயதெல்லை அதே விதத்தில் ஏதுவாயமைகின்றதா என்பதையும்;

(iii) அண்மித்த இறுதிச் சந்தர்ப்பத்தில் நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள பதவிகள், பதவிப் பெயர்கள், இடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2458/ '12

9.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரஸ்ஸ மாவட்ட வைத்தியசாலையில் குழாய் நீர் வழங்கல் முறையும் நீர்த்தாங்கியும் போதியதாயில்லாமையினால் நோயாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதையும்;

(ii) வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தமையைத் தொடர்ந்து மேற்படி பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்குரஸ்ஸ வைத்தியசாலைக்கு போதியளவு நீர் வசதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கேற்ப தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலையின் நீர் வசதிகளை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2564/ '12

10.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டாவ, மத்தேகொட வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்களின் நன்மை கருதி ஒதுக்கப்பட்டிருந்த மரம் செடிகொடிகளைக் கொண்டிருந்த நிலப் பரப்பில் அரைவாசிக்கும் மேற்பட்ட பிரதேசத்தில் காணப்பட்ட மரங்களை அகற்றி புதிய நிர்மாணமொன்றுக்கென கொங்கிறீட் இட்டுள்ள நிறுவனம் அல்லது கம்பனி யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் காணப்பட்ட பொது குளியல் கிணற்றுடன் கூடிய காணித்துண்டைச் சுற்றி தகர வேலியொன்றை அமைத்து, குடியிருப்பாளர்கள் அந்தக் கிணற்றைப் பயன்படுத்துவதைத் தடுத்துள்ளவர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் வீதிகளை உரிய முறையில் பராமரிக்காது, அப்பணிகள் ஹோமாகம பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அங்கு அமைக்கப்பட்டுள்ள நிலக்கீழ் நீர்த்தாங்கி ஏன் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதையும்;

(iii) வீடமைப்புத் திட்டத்தின் அனைத்து வருமானங்களையும் ஈட்டிக்கொள்ளும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை குடியிருப்பாளர்களின் சேமநலன் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது அங்கு புதிய நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு ஏன் தயாராகிறது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2795/ '12

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் புகையிரதப் பாதைகளை ஊடறுத்துச் செல்ல வேண்டியுள்ள குறுக்குப் பாதைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி குறுக்குப் பாதைகளில் அதிகளவிலான பயணிகள் தினசரி பயணம் செய்கின்ற குறுக்குப் பாதைகளாக இனங்காணப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி குறுக்குப் பாதைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் இடம்பெற்றுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை, மரணங்களின் எண்ணிக்கை வருடரீதியில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அத்தகைய விபத்துக்களின் மூலம் இடம்பெற்றுள்ள சொத்துச் சேதங்களின் பெறுமதி வருடரீதியில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) புகையிரதக் கடவையொன்றைப் பொருத்துவதற்காக செலவாகும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) புகையிரதக் கடவையொன்றில் பணியாற்றும் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம் அல்லது கொடுப்பனவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2826/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில்—

(i) முப்படைகளிலிருந்தும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(ii) இராணுவத்தில் பிரிகேடியர் தரத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அல்லது அதற்கு சமனான கடற்படை மற்றும் விமானப்படையிலுள்ள அதிகாரிகளில் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் பெயர்களையும் அவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களையும்;

(iii) அந்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை வெவ்வேறாகவும்

அவர் சபைக்குத் தெரிவிப்பரா?

(ஆ) (i) தற்போதுள்ள நீதிமன்ற முறைமை இராணுவ நீதிமன்றத்தை அங்கீகரித்துள்ளதா என்பதனையும்;

(ii) அவ்வாறாயின் இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்வதற்கான சாத்தியம் உண்டா என்பதனையும்;

(iii) இராணுவ நீதிமன்றத்தின் தீர்மானங்களை தள்ளுபடி செய்வதற்கு அதிகாரமுடைய ஆளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3050/ '12

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரச பாடசாலைகள் இராணுவமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன என்பதையும்;

(ii) இதன் கீழ் உயர்தர மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுதலும் அதிபர்களுக்கு கேர்ணல் பதவிகள் வழங்கப்படுதலும் இடம்பெற்று வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களுக்கு இராணுப் பயிற்சி வழங்குவதற்கான கருத்திட்டத்தை ஆரம்பித்ததன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) உயர்தர மாணவர்களையும் பாடசாலைகளையும் இராணுவமயமாக்கலில் இணைத்துக்கொள்ளாது மேற்படி மாணவர்களின் கல்விக்கான உரிமையைப் பாதுகாத்து மேற்படி நோக்கத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3284/ '12

14.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டில் கண்டி மாவட்ட மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JAICA) நிதி உதவியின் கீழ் நீர் வழங்கல் கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ், கட்டுகஸ்தோட்டை, கொண்டதெனிய பிரதேசத்தில் நீர் தாங்கியொன்று நிர்மாணிக்கப்பட்டு மேற்படி பிரதேச மக்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டபோதிலும், அக்குறணை துணுவில வடக்கு, தெற்கு, ஹீபிட்டிய, பண்கொல்லாமட, உடதீகல, தொரகமுவ, உடுராவன, அளுத்கம, பரணகம ஆகிய கிராமங்களின் குடியிருப்பாளர்களுக்கு இதுவரை குடிநீர் வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச மக்களுக்கு நீர் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் எதிர்பார்ப்புடன் தொரகமுவ பன்சல்வத்தயில் புதிய நீர் தாங்கியொன்றை நிர்மாணிப்பதற்கு பல தடவைகள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதுள்ள மேற்படி கருத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) குடிநீர் வசதிகளின்றி நிர்க்கதி நிலையில் இருக்கும் மேலே குறிப்பிடப்பட்ட கிராமவாசிகளுக்கு தாமதமின்றி குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3300/ '12

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சொத்தொன்றான 'லங்கா ஹொஸ்பிரல் நிறுவனம்' பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரச கூட்டுத்தாபனமொன்றுக்கு உரித்தான கம்பனியொன்றை பங்குச் சந்தையில் பதிவு செய்வது தொடர்பான சட்ட ரீதியான தன்மை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுசில் முணசிங்க.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பி. ஆர். இரத்நாயக்க.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.15/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/  ’10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ‘விசேட வழக்குத் தொடுநர்’ எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு “விசேட வழக்குத் தொடுநர்” எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ ’10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ ’10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ ’10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ ’10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

21.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

22.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

23.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

24.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

25.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

26.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

27.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

28.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

29.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

30.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

31.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 77/ '10

32.

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

33.

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

34.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

35.

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

36.

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

37.

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

38.

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

39.
கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

40
கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

41.
கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

42.
கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

43.
கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

44.

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

45.

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

46.

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

47.

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

48.

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

49.

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

50.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

51.

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

52.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

53.

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

54.

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

55.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

56.

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

57.

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

58.

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

59.

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

60.

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

61.

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

62.

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

63.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

64.

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

65.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

66.

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

67.

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

68.

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

69.

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

70.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.127/'11

71.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/'11

72.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

73.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

74.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

75.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

76.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

77.

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

78.

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.141/'11

79.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

80.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

81.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

82.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.147/11

83.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

84.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

85.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

86.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

87.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

88.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

89.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

90.

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

91.

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

92.

கௌரவ புத்திக்க பத்திரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

93.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

94.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

95.

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

96.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

97.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

98.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

99.

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

100.

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார்செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

101.

கௌரவ புத்திக பத்திரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.124/ '11

102.

கௌரவ ருவன் ரணதுங்க,— கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்களின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.175/'13

103.

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

104.

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

105

கௌரவ புத்திக்க பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

106.

கௌரவ புத்திக பத்திரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

107.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

108.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.181/ '13

109.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதிபதிகள் தொழில் பயிற்சி நிறுவகமொன்றை தாபித்தல்,— இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் நீதி நிர்வாகத்தின் பொருட்டு பண்புசார் மேம்பட்ட நீதிபதிகளை உருவாக்குவதே முதன்மைத் தேவையாக காணப்படுவதால், அதற்கு தேவையான “பண்புசார் மேம்பட்ட” பயிற்சியொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது தாபிக்கப்பட்டுள்ள “இலங்கை நீதிபதிகள் நிறுவகம்” எவ்விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதால், நீதிபதிகளை பயிற்றுவிப்பதற்கு பல்கலைக்கழகமொன்றின் தரத்துக்கேற்ற நீதிபதிகளின் தொழிற்பயிற்சி நிறுவகமொன்று தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.182/ '13

110.

கௌரவ அஜித் பி. பெரேரா ,— இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழக கல்வியையும் ஆங்கில மொழியில் இலவசமாக போதித்தல்,— இலங்கையின் சகல அரச பாடசாலைகளிலும் இரண்டாம் நிலைக் கல்வியும் சகல அரச பல்கலைக்கழகங்களிலும் முழுமையான கல்வியும் ஆங்கில மொழியில் போதிக்கப்பட வேண்டுமென்றும், மேற்படி கல்வியானது முழுமையாகவே அரச செலவில் வழங்கப்படுகின்ற இலவச கல்வியாக அமைதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.183/ '13

111.

கௌரவ அஜித் பி. பெரேரா,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய திடீர் விபத்துகளினால் உயிரிழந்த ஆட்களின் வாரிசுகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும், அவ்வாறான விபத்துகளினால் காயமடைந்த ஆட்களுக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சிரமமானதும் நீண்டதுமான நீதிமன்ற செயற்பாடொன்றில் பங்குபற்ற நேர்ந்துள்ளதால் அவர்கள் மிகவும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதனால், மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.186/ '13

112.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ '13

113.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ '13

114.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— "பீறலு" என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— "பீறலு" குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 115.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் - விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2013, யூன் 06) [1].

* 116.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 117.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 118.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 119.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 120.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 121.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 122.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 123.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 124.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 125.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

126.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

127.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

128.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

129.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

130.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

131.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

132.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.